# சென்னையில் ஆர்ப்பாட்டம்!

பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆவணி 8 றமழான் 8 இதழ் 193

யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-8-77

## சட்ட மாணவர்கள் நடத்தினர்

சென்னை, ஆக. 23

ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களுக்குஅனுதாபம் தெரிவித்து தமிழகச் சட்டக்கல்லூரி மாணவர்கள் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை சென்னையில் நடத்தினர்.

இந்த ஊர்வலத்துக்கு சட்டக்கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் தலைமை வகித்தார். 400க்கும் அதிகமானவர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

சட்டக்கல்லூரி மாணவர்களின் கைகளில் பல சுலோக அட்டைகள் காணப்பட்டன.

''ஈழத் தமிழர் துயர் துடைக்க இந்திய அரசு தலையிட வேண்டும்; இலங்கைத்தமிழர்கள் செத்து மடிகின்றார்கள்; தமிழ் ஈழத்தமிழர்களின் விஷயத்தில் தமிழக அரசு உடன் தலையிடவேண்டும் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டியது இந்திய அரசின் கடமை'' என்று கூறும் ஏராளமான சுலோக அட்டைகளை சட்டக்கல்லூரி மாணவர்கள் ஏந்திச் சென்றனர்.

மாணவர்கள் கோஷித்துக்கொண்டு ஊர்வலமாகசென்று சென்னையிலுள்ள இலங்கை உதவி ஹைகமிஷனரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர். இலங்கைத் தமிழர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்; செத்துக்கொண்டிருக்கும் ஈழத் தமிழரைப் பாதுகாத்து அவர்களின் உரிமைகளை வழங்க இலங்கை அரசு உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்'' என்று இம்மகஜரில் கேட்கப்பட்டிருந்தது.

இந்த மகஜரை புதுடில்லியிலுள்ள இலங்கை ஹைகமிஷனரிடம் கையளிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொண்டதைத்தொடர்ந்து, மகஜரை புதுடில்லிக்கு உடனடியாக அனுப்பிவைப்பதாக உதவி ஹைகமிஷனர் அதிகாரிகள் மாணவர்களிடம் உறுதியளித்தனர்.

# 3 கப்பல்களில் இன்று அகதிகள் புறப்படுவர்!

## வெள்ளிக்கிழமை நண்பகல் பருத்தித்துறை வருவர்

**கொழும்பு நகருக்கு வெளியேயிருந்தும் வெளியூர்களிலிருந்தும் அகதிகளாக வந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் அதை அடுத்துள்ள ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ள ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஆண், பெண், குழந்தைகளான தமிழர்கள் இன்று புதன்கிழமை மூன்று கப்பல்களில் கொழும்புத் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

இந்தக்கப்பல்கள் வெள்ளிக்கிழமை நண்பகல் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**முகாம்களில் 15000 அகதிகள்**

பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் பலர் வாழ்ந்த இடங்களைக்கூடக் கொள்ளையர்களும் வெறியர்களும் தாக்குதல் நடத்தியதால்பலர் தமது உடமைகள் யாவற்றையும் இழந்து தமிழ்மக்களின் பாரம்பரியமான இடங்களுக்குச் செல்வதற்காகப் பல இடங்களிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். இப்படித் தஞ்சம் புகுந்துள்ளவர்களின் தொகை பதினையாயிரத்துக்கு மதிகமாக இருக்கலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொலை

ஒருவாரகாலத்துக்குள் நாட்டின் பல பாகங்களிலும் நிகழ்ந்துள்ள இக்கலவரங்களில் ஐம்பதுக்குமதிகமானோர் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. அநுராதபுரம் புகையிரதநிலைய அதிபராகக் கடமையாற்றிய சதாசிவம் என்பவர்தாக்குதலுக்குள்ளாகி அங்குள்ள ஆஸ்பத்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்றுக்காலை அவர் அங்கு காலமானார். அநுராதபுரத்தில் கலவரத்தில் மாண்ட மற்றும் பலரின் சடலங்கள் அழுகிப்போனமையால் அவை அங்கேயே தகனம் செய்யப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பு காஸ்வேர்க்ஸ் வீதியில் இரண்டுதமிழரும் ஒரு இஸ்லாமியரும் காடையர்களின் தாக்குதல்களுக்குப் பலியானதாகவும் கொழும்புமுகத்துவாரத்தில் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர் சிலர் இரண்டு பெண்களை வெட்டியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## செஞ்சிலுவைச்சங்கம்

கொழும்பில் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக் கிளையினர் உதவி செய்துவருவதாகவும் விரைவில் இவர்கள் திருக்கோணமலைக்கும் வவனியாவுக்கும் செல்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. திருக்கோணமலையில் நிகழ்ந்த கலவரத்தில் இருதரப்பிலும் பத்துப்பன்னிரண்டுபேர் மாண்டிருக்கலாமென்றும் தகவல்கள் கூறுகின்றன.

## அவசரகாலநிலைமற்றி அமிர்

தமிழ்மக்கள் தாக்கப்படுவது பற்றியும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டியது பற்றியும் அடிக்கடி பிரதமருடன் தொடர்புகொண்டுவரும் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம், பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவைச் சந்தித்து ''அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்படவேண்டும்'' என்று வலியுறுத்தியதாகவும் ''நிலைமை கட்டுக்கடங்கிவருவதால் இது அவசியமில்லை'' என்று பிரதமர் பதிலளித்ததாகவும் ஆஸ்திரேலிய வானொலி நேற்றிரவு தனது செய்தி அறிக்கையொன்றில் தெரிவித்தது.

### அமைச்சர் கைது!

புதுடில்லி, ஆக. 23

முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. பன்ஸிலால் இன்று கைதுசெய்யப்பட்டார்!

இளைஞர் காங்கிரஸின் ஐந்து லட்சம் ரூபாவைக் கையாடியதாகக் கைதுசெய்யப்பட்டுள்ள இவர், நாளைக் காலை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செயயப்படுவார்.

இதேநேரத்தில் பன்ஸிலாலின் மகன் சுரேந்திரசிங் மீதும் (பணத்தைக் கையாடிய குற்றத்தின் பேரில் கைதுசெய்வதற்கான) வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### மொரார்ஜிக்கு கோரிக்கை

புதுடில்லி, ஆக 23


இலங்கையில், தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பயங்கரத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை தமிழ்த் தலைவர்கள் பலர் கோரியுள்ளனர்.

இலங்கையில் தமிழர்களுக்குப் பெரும்நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், இவ்விஷயத்தில் உடன[illegible] யிட்டு உதவுமாறும் இத்தலைவர்கள் இந்தியப் பிரதமரை ஒரு மகஜர் மூலம் வேண்டியுள்ளனர்.

## அகதிகள் முகாம்கள்

வெளியிடங்களிலிருந்து அகதிகளாக பஸ்களிலும் லொறிகளிலும், கார்களிலும் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பெருந்தொகையானோர் வந்துகொண்டிருக்கின்றனர். கிளிநொச்சியிலுள்ள அகதி முகாமில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்கியுள்ளனர். இவர்களுக்கு கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்த சங்கரியும் மற்றும் பொதுமக்களும் உணவளித்துப் புகலிடமளித்து அவரவர் செல்ல வேண்டிய இடங்களுக்கு அனுப்பிவைத்துவருகின்றனர். வவனியாவில் தாக்குதலுக்குள்ளானவர்களை இளி

[3-ம் பக்கம் பார்க்க]



### கலைஞர் தலைமையில் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் இன்று 'புதன்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலம் 'சென்னையில் நடைபெறும்

★ கடைசிச் செய்தி

### எம். ஜி. ஆர். கோரிக்கை

சென்னை, ஆக. 23

ஈழத்தமிழர் விஷயத்தில் உடனடியாகத் தலையிட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைக் கேட்டுள்ளார்

## அறிவித்தல்

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை
ஊழியர்களுக்கு

தொழிற்சாலை ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதி புதன் கிழமை மீண்டும் ஆரம்பிக்கும்.

6—2 முறைமாற்ற ஊழியர்கள் காலை 8 மணிக்கு சமுகமளிக்கலாம்.

தொழிலதிபர்.

23-08-77. 6891

## வரி விளம்பரம்


### தேவை

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், ஆமணக்கம் விதைகள் தொகையாகத் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794

எங்கள் வேலைத்தலத்திற்கு தையற் கலையில் திறமை வாய்ந்த பெண்மணிகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். வேலணை, சரவணை, கரம்பன், நாரந்தனை, புளியங்கூடல் பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. வேலைத்தலத்திற்கு முன்பாக பஸ் சேவை உண்டு. விடுமுறை நாட்கள் தவிர காலை 9 மணியில் இருந்து 12 மணி வரை நேரில் வரவும். வி. கே. பி. தொழிலகம், அரசினரால் அங்கீகாரம் பெற்றது. புளியங்கூடல், ஊர்காவற்றுறை. 6863


# அகதிகளாக வந்தோருக்கு புனர்வாழ்வுத் திட்டம்

## சமூகசேவைகள் பகுதி ஆரம்பிக்கிறது

யாழ்ப்பாணம், புதன்

வெளி மாகாணங்களிலிருந்து அகதிகளாகத் திரும்பியுள்ள தமிழ் மக்களுக்குப் புனர் வாழ்வளிக்கும் நீண்ட காலத் திட்டம் ஒன்றை மேற்கொள்ளச் சமூகசேவைப் பிரிவு நடவடிக்கை எடுத்துவருகிறது.

வெளி மாகாணங்களில் நீண்ட காலமாக வசிழ்ந்து, தற்போது தமது, நிலம், வீடு உட்படச் சகல உடைமைகளையும் இழந்து, இங்கு யாருமற்ற அகதிகளாக வந்துள்ள தமிழ் மக்களுக்கு மட்டுமே இந்த நீண்ட காலப் புனர் வாழ்வு அளிக்கப்பட உள்ளதாக யாழ். சமூக சேவைப் பகுதி உத்தியோகத்தர் திரு பி எஸ். திருச்செல்வம் தெரிவித்தார்.

இந்த நீண்ட காலப் புனர் வாழ்வுத் திட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் நிதி உதவியையும், ஆலோசனைகளையும் சமூக சேவைப் பகுதி கோரியுள்ளது.

இப்புனர் வாழ்வுத் திட்டத்திற்கான ஆலோசனைகளை எழுத்து மூலமாகவோ, நேரிலோ பொது ஸ்தாபனங்களும் சமூக சேவை ஸ்தாபனங்களும், தனிப்பட்டவர்களும் தமக்கு வழங்கலாமென்றும் சமூக சேவைப் பகுதி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

### புனர்வாழ்வு நிதி

இந்த நீண்டகாலப் புனர் வாழ்வுத் திட்டத்திற்கு நிதி ஒன்றும் சமூக சேவைப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிதிக்குப் பொறுப்பாகச் சமூக சேவைப் பகுதிப் பிரதம லிகிதர் திரு. எஸ். நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க விரும்புபவர்கள் யாழ். ஸ்ரான்லி கல்லூரியில் தங்கியிருக்கும் திரு நடராசாவிடம் பணத்தைக் கொடுத்துப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறும், வேறெவரும் நிதி சேகரிப்பில் ஈடுபடாதமையால் மற்றவர்களிடம் நிதியைக் கொடுத்து ஏமாறவேண்டாமென்றும் சமூக சேவைப் பகுதிப் பொதுமக்களைக் கோரியுள்ளது.

சமூக சேவைப் பகுதியின் இந்த நிவாரண வேலைகள், யாழ். சமூக சேவைப் பகுதி உதவி அத்தியட்சகர் திரு. கே. கெங்காதரன் தலைமையில் நடைபெற்றுவருகிறது. (இ)

## சீமெந்துத் தொழிற்சாலை வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மீண்டும் இன்று இயங்க ஆரம்பிக்கும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவித சம்பவங்களையடுத்து நிலைமை சீரடையும்வரை தொழிற்சாலை இயங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

6 மணி - 2 மணி 'சிப்ற்' வேலைசெய்யும் ஊழியர்கள் காலை 8 மணிக்கு வேலைக்கு செல்லலாமென தொழிற்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

—

## சிரமம்

சுழிபுரம், செவ்வாய்

காரைநகர் வலந்தலை உப தபால் நிலையத்தில் தொலைபேசிச்சேவை சீர்கேடு அடைந்துள்ளது. இதனால் இப் பகுதியிலுள்ள பொதுமக்கள் சிரமமுறுகின்றனர். (உ)

## பாதிக்கப்பட்ட அரச ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

அசம்பாவிதங்களினால் பிற பகுதிகளில் பாதிக்கப்பட்ட சகல அரசாங்க ஊழியர்களது நலன்கருதி சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை சேகரித்து அவர்களுக்கு உதவுவதற்கு இச் சங்கம் ஏற்பாடுசெய்துள்ளது. வெளியூர்களில் அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்பியுள்ள அரச ஊழியர்களை பின்வரும் முகவரியில் வைத்தியகலாநிதி கே. பாலசிங்கத்துடன் தொடர்புகொள்ளும்படி இச் சங்கம் கோரியுள்ளது.

டாக்டர் கே. பாலசிங்கம்,
146, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## துப்பாக்கிகள் கொள்ளை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்றில் இருந்து 2 துப்பாக்கிகள் இனம் தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (கா)

## தடுப்புக் காவல்

கொழும்பு, செவ்.

கண்டி மாவட்டத்தில் கடந்த தேர்தலில் தோல்வியடைந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் சிலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கண்டியில் 'டட்லி பெரமுனே' என்ற இயக்கத்தைச் சேர்ந்த பிரபலஸ்தர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

## 'பாய், தலையணை, உடை அகதிகளுக்கு அவசிய தேவை'

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி முகாம்களில் அகதிகளாகத் தங்கியிருப்போருக்கு பாய், தலையணை, உடுபுடவைகள் ஆகியனவே உடனடி அத்தியாவசியத் தேவையாக உள்ளன என்று சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

அகதிகளுக்கு உதவ விரும்பும் பொதுமக்கள் உடனடித் தேவையான இப்பொருட்களை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமைத்த உணவாகக் கொடுக்க விரும்புபவர்கள், ஏற்கனவே அது பற்றி சமூக சேவைப் பகுதியினருடன் தொடர்புகொண்டு நாள் குறித்த பின்னர் உணவை வழங்கலாம் என்றும் முன்னறிவித்தல் உணவு வழங்குவதால் பல உணவுவகைகள் கெட்டுப் போய் வீணுகின்றன என்றும் அந்த அதிகாரி கூறினார்.

அகதி முகாம்களுக்குச் செல்லும் பொதுமக்கள் அங்கு பெருந்திரளாகக் கூடி நின்று அகதிகளுக்கும் தொண்டர்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தவேண்டாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ)

## இன்று [illegible]ஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில்சங்காபிஷேகம் இன்று பகல் விசேட ஆராதனைகளுடன் நடைபெறும். (கெ)

—

## தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேரடித் திருவிழா

யாழ்ப்பாணம், புதன்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தேரடித் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெறவிருக்கிறது.

இரவு திருமறை ஒநல், யாழ்வளாக மாணவர்களின் இன்னிசை விருந்து, விசேஷ மேளக்கச்சேரி முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துவோர் விபரம் வருமாறு: சி. மாணிக்கராசா-பாட்டு, க. வரதராசன்-மிருதங்கம், மு. உமாகாந்தன்-வயலின், வி. ஐம்புநாதன்-கெஞ்சிரா, தி. சீலன்-சசிபாஜா, செ. இராசா-மோர்சிங், சோ. கார்த்திகைக் குமரன்-கடம்.

இரவு 8-45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், அம்பாள் உலாவும் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து எஸ். சிதம்பரநாதன், எஸ்.சிவகுருநாதன் குழுவினரின் தவில்க்கச்சேரி இடம்பெறும். (அ)

## "இறைவன் அளித்த தேவஞானம்"

அரியாலை, செவ்.

"விஞ்ஞான அறிவு கடவுளால் உண்டாக்கப்பட்டது. இந்த அறிவைக்கொண்டு அநேகர் யுத்தங்களையும், யுத்தங்களுக்கு வேண்டிய பயங்கரமான ஆயுதங்களையும் செய்து இனத்தையே அழிக்க முற்படுகிறார்கள். அதே அறிவின் மூலம் மனித சமுதாயத்திலுள்ள பஞ்சம்-பட்டினி-நோய்-துன்பங்களை அறவே நீக்க மருந்துகளும் - ஏனைய பொருட்களும் செய்யப்படுகின்றன. இந்த அறிவு இறைவன் எமக்கு அருளிய தேவ ஞானத்தின் மூலம் உண்டாகிறது இந்த அறிவைக் கொண்டு மனிதன் அழிவையும் மேற்கொள்ளலாம். ஆக்கத்தையும் மேற்கொள்ளலாம்"

இவ்வாறு கொழும்பு அத்தியட்சாதீன ஆயர் வணக்கத்துக்குரிய சிறில் - அபயநாயக்கா ஆண்டகை நல்லூர்-பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற தி-ப்படுத்தல் ஆராதனையில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இறைவன் எமக்கு அருளிய வளர்ச்சி சரீரப்பிரகாரமான வளர்ச்சியல்ல. உங்கள் சரீரங்கள் பரிசுத்த ஆவியின் ஆலயங்கள் என்று பரிசுத்தபவுல் கூறுவதுபோல ஆலயம் எப்படிப் பரிசுத்த ஸ்தலமாக அமைகிறதோ அதைப்போலவே நமது சரீரமும் பரித்தமானதாகும். எமது இறைவன் பரிசுத்தராக இருப்பதுபோல நாமும் பரிசுத்தராக இருக்கவேண்டும். இறைவன் எமக்கு அருளிய தேவபக்தி எம்மிடம் நிலைகொள்ளுமானால் நாளையைப் பற்றிய பயம் எமக்கு அவசியமில்லை" என்றார்.

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மகோற்சவ இன்றைய திருவிழாவில், "முன்செய் புண்ணியம்" என்னும் தலைப்பில் அருட்கவி சீ.விநாசித்தம்பியின் சொற்பொழிவும் நாளை 25ந்திகதி வியாழக்கிழமை "கிரகதோற்சவமகிமை" பற்றி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும் இடம் பெறும். (கெ-உ)

## தண்ணீர்க் கஷ்டத்தை நீக்க...

வேலணை, செவ்வாய்

புங்குடுதீவில் உள்ள மாக்கொடைக்கிராமத்தில் தண்ணீர்ப்பஞ்சத்தைப் போக்கும் முகமாக சர்வோதய இயக்கத்தினர் அப்பகுதியில் உள்ளவர்கள் குளிப்பதற்கும் மற்றும் அன்றாட தேவைகளுக்கும் தண்ணீர் பாவிப்பதற்குமாக சுமார் 15அடி விட்டத்தில் ஒருகிணற்றை வெட்டிக் கொடுத்து உதவியுள்ளனர். (இ)

## 'இறைவனுடன் மனிதனை ஒன்றச்செய்வது இசைக்கலை'

மாவிட்டபுரம், செவ்.

'இசைக்கலையானது மனிதனுக்கு இறை மோட்சத்தைத் தரவல்லது. இறைவன் பால் மனிதனை ஒன்றி நிற்கச்செய்து இறை மோட்சத்திற்கு ஈர்த்துச் செல்லக்கூடியது. இவ்விசைக்கலையை சிறுவயது முதல் நமது நாட்டில் பேணி வளர்த்ததோடு நின்றுவிடாமல் வெளிநாடுகளில் நமது கலைத்திறமை கொடிகட்டிப் பறக்க வழி வகுத்த இவ்விரு கலைஞர்களையும் பாராட்டிக் கௌரவிப்பது மிகவும் பொருத்மானதாகும்'

இவ்வாறு நாகசுர வித்துவான் பீ. எஸ் ஆறுமுகம் பிள்ளைக்கும் தவில்வித்துவான் பி. எஸ்.ராஜகோபால்பிள்ளைக்கும் யாழ். வண்ணை கதிரேசன் கோவில் மண்டபத்தில் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துரையாற்றிய இலங்கை பல்கலைக்கழக யாழ். வளாக இந்து நாகரிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் கூறினார்

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து இவ்விரு கலைஞர்களும் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு நடந்த பாராட்டு விழாவில் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'தமிழ் மக்களாகிய எமது பாரம்பரியக் கலைகள் 64ஆக இருந்தபோதும் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் ஆகிய 6 கலைகளும்தான் சிறந்து விளங்குகின்றன. இந்த 5 கலைகளுக்குள் இசைக்கலையானது தனித்தன்மைவாய்ந்தது கலைகளுக்கெல்லாம் தலையானது. மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் பக்தி நெறியை வளர்த்து மனிதனை இறைவனுடன் சேர்ப்பது. இவ்விசைக் கலையை கோவில்களை மையமாக வைத்து நமது இசையாளர்கள் பேணிப் பாதுகாத்து வருகிறார்கள். நமது நாட்டின் இசைவளர்ச்சியில் இசையாளருக்குப் பெரும்பங்குண்டு. நமது நாட்டில் இசைவளர்ப்பதோடு நில்லாது தமது கலைத் திறமையை இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் எடுத்துக்காட்டி நமது நாட்டுக்கு புகழ்தேடித்தருகிறார்கள். இவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பது அவர்களது ஆர்வத்தை மேலும் வளர்ப்பதாக அமையுமாதலால் இப்படியானபாராட்டுகள், கௌரவங்கள் மிகவும் அவசியமானவை' என்றார்.

நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பேசுகையில் கூறியதாவது;

கோவில்களை மையமாக வைத்து நடத்தப்படும் இசையாளர்களது இசைச் சேவையைப் பாராட்டி தேவஸ்தானங்கள்தோறும் விழா எடுக்கப்படவேண்டும். அதன் மூலம் இசைக்கலையை நாம் வளர்ப்பதாகமுடியும்.

மற்றும்பல பிரமுகர்கள், ஈழத்துச் சிவாசாரியார்கள் உட்படப் பலர் பாராட்டுரைகள் வழங்கினார்கள்.

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராசா கலைஞர்களுக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார்.

திரு. ஆறுமுகம்பிள்ளைக்கு 'நாதஸ்வரவித்வசரப' என்னும் பட்டமும், திரு. இராஜகோபால்பிள்ளைக்கு 'நந்திகேஸ்வர ஆனந்தகே' என்ற பட்டமும் சூட்டிப் பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப்பட்டது. (உ)


## வட இலங்கைச் சங்கீதசபை அறிவித்தல்

1977-ஆம் ஆண்டு ஆவணி புரட்டாதி மாதங்களில் நடாத்த ஒழுங்குசெய்துள்ள மேற்படி சபைச் சங்கீத பரீட்சைகள் (செயன்முறை, சாஸ்திரம்) மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது.

க. சிவநாதன்
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்,
வடமாநிலவித்தியாதிபதியும்.

சங்கீதசபை அலுவலகம்
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
22-8-1977.

6886

# நெருக்கடியில் கொள்ளை லாபமா?

## வர்த்தகர்களுக்கு கோப்பாய் எம். பி. எச்சரிக்கை

யாழ்ப்பாணம், புதன்
'நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை முன்வைத்து வியாபாரிகள் கொள்ளை லாபமடித்து வருவதையிட்டு மக்கள் தினமும், முறைப்பாடு செய்து வருகிறார்கள். இவ்வேளையில், யாழ். வர்த்தகர்கள், இம்முயற்சியில் ஈடுபடாமல் சில விபரீத நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காமல், பொது மக்களுக்கு சேவையாற்றும்படி கோப்பாய் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, வர்த்தகர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

'இன்று தமிழ் பேசும் மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்குவதால் சகல வர்த்தகர்களும், தம்மால் இயன்ற அளவு கையிருப்பில் உள்ள பொருட்களை நியாய விலையில் வழங்குமாறு கோருகிறேன். இதே வேளையில் நெருக்கடியான நிலைமையிலும் தமது வர்த்தக நிறுவனங்களையும் சந்தையும் திறந்து சேவையாற்றி வருவதை பாராட்டுகின்றேன். (கெ)

## "ஒத்துழைப்பு நல்கவேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்
"சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட யாழ் - முஸ்லிம் மக்களுக்கு சகல முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்ட தம்மாலியன்ற ஒத்துழைப்பை நல்கவேண்டுமென, அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்கத்தின் யாழ்கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது. இயக்கத்தின் சார்பில் அதன் செயலாளர் ஜனாப் எம். எஸ். நசீம் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளார். (கெ)

## அலுவலகங்கள், வங்கிகள் மீண்டும் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்
கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் ஸ்தம்பித நிலையில் இருந்த யாழ். கச்சேரி உட்பட அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் என்பன வழமை போல் நேற்றுமுதல் இயங்கத் தொடங்கியுள்ளன.

ஊழியர்கள் வழமைபோல் நேற்றுக்காலை தத்தம் வேலைத் தலங்களுக்கு வந்து கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

இதனையடுத்து மேற்கூறிய இடங்களில் வேலைகள் சுறுசுறுப்புடன் நடைபெற்றன.

இ. போ. ச. பஸ் சேவைகள் நேற்றுக்காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெற்றன. காலையில் பஸ்களில் பிரயாணிகள் குறைவாகக் காணப்பட்ட போதிலும் நண்பகலுக்குப் பின் பிரயாணிகள் கூடிய அளவில் பஸ்களில் காணப்பட்டனர்.

பஸ்கள் சேவையில் மீண்டும் ஈடுபடுத்தப்பட்டமையால் யாழ். நகரும் ஏனைய பகுதிகளும் சகஜ நிலைக்குத் திரும்பி விட்டது என்ற உணர்வு வலுப்பட்டது.

லொறிகள், கார்கள் முதலான வாகனங்களும் முன்னரைப் போல்பெருமளவில் செல்வதை நகரில் காணக்கூடியதாக இருந்தது. (கெ-உ)

## வளாகங்கள் மூடப்பட்டன

கொழும்பு, செவ்.
இலங்கைப் பலகலைக்கழகத்தின் சகல வளாகங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன.

# யாழ் நகர் வரும் இந்திய அகதிகள்

யாழ்ப்பாணம், புதன்
அனுராதபுரத்துக்கும் அப்பால் வசித்துவந்த 3,500 க்கும் அதிகமான இந்தியவம்சா வளியினர் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். கிளிநொச்சியிலும் மற்றைய சில பகுதிகளிலும் அமைக்கப்பட்ட தற்காலிக அகதிகள் முகாம்களில் பொதுமக்களின் பேராதரவுடன்உணவும் உடையும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட 3500இந்திய வம்சாவழியினரும் தற்போது கிளிநொச்சி, பூநகரி, ஸ்கந்தபுரம், திருவையாறு, பளை, முழங்காவில் ஆகிய பகுதியில் திறக்கப்பட்ட அகதி முகாம்களில் இடமளிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தை அறியாதவர்கள். கண்டி, மகாஇலுப்பள்ளம், மதவாச்சி, அனுராதபுரம்,வத்துகாமம், குண்டசாலைப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இவர்கள். திரும்பவும் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல இவர்கள் விருப்பாததால் கிளிநொச்சி,பரந்தன், திருவையாறு, மட்டுவில்நார் ஆகிய பகுதிகளில் குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றுவதற்கு கிளிநொச்சித் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரி நடவடிக்கை எடுத்துவருகிறார்.

அகதிகளுக்கான முகாம், உருத்திரபுரம் ம. வித்தியாலயம், ஸ்கந்தபுரம் ம. வித்தியாலயம், கிளிநொச்சி ம. வித்தியாலயம், முழங்காவில் ம. வித்தியாலயம், மட்டுவில்நகர் ம. வித்தியாலயம், அக்கராயன் ம. வித்தியாலயம், பளை ம. வித்தியாலயம், யானைமடம் ம. வித்தியாலயம், திருவையாறு ம. வித்தியாலயம், முத்தையன்கட்டு ம. வித்தியாலயம். இராமநாதபுரம் மகாவித்தியாலயம் ஆகிய மாவித்தியாலயங்களில் சமூக சேவைப்பகுதினரால், திறக்கப்பட்டு அகதிகளுக்கு தஞ்சம் அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் போதுமான உணவு வசதிகளையும் உடையையும் வழங்கி வருகின்றனர். தொடர்ந்தும் 5000 அகதிகள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (கெ)

## வெளியூர் ஆசிரியர்களுக்கு யோசனை

யாழ்ப்பாணம், புதன்
வெளியிடங்களிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தத்தம் பாடசாலைகளுக்கு செல்ல வசதியில்லாவிடின் தாம் வசிக்கும் பகுதிகளிலுள்ள கல்வி அதிகாரிகளிடம் சென்று முறையிடும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க பாடசாலைகள் சில இரண்டாந்தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள போதிலும் சில பாடசாலைகள் இன்னமும் இயங்கி வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய அசம்பாவித சம்பவங்களையடுத்து ஆசிரியர்கள் பலர் தமது பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## ஒரு வருடத்தில் 6 கோடி ரூபாய் சம்பாதித்தார்

கொழும்பு, செவ்.
கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் புடவை வியாபாரி ஒருவர் ஒரு வருடத்தில் 6 கோடி 40 லட்சம் ரூபாவை சம்பாதிக்கக் கூடியதாக இருந்தது.

இத் தகவலை நிதிஅமைச்சர் திரு. ரொனி டீ மெல் இன்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார். (இ)

## தீப்பெட்டி மருந்துகள் திருட்டு

யாழ்ப்பாணம், புதன்
தீப்பெட்டி தயாரிக்கவிருக்கும் வடபகுதியிலுள்ள பல நோக்குச் சங்கமொன்றிற்குக் கிடைக்கப்பெற்ற முக்கிய மருந்துவகைகள் திருட்டுப் போயுள்ளதாக சங்கானைப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிசார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள். (கெ-அ)

## முன்னாள் நீதிபதி தலைமையில் கமிஷன் நியமனம்?

(கொழும்பு)
அண்மையில் நிகழ்ந்த வன்செயல்கள் கலவரங்கள்குறித்து நீதிவிசாரணை நடத்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் கமிஷன் நியமிக்கப்படலாமென நம்பப்படுகிறது.

இந்தவிசாரணைக் கமிஷனில் ஏழுபேர் அங்கம் வகிக்கலாம் என்று அறியப்படுகிறது.

## அமிர் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்
எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவருமான திரு அமிர்தலிங்கம் இன்று காலை விமானத்தில் யாழ்ப்பாணம் வந்து சேருகிறார்.

## யாழ்ப்பாணத்தில்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
வண்டிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துசேரவிருப்பதாகவும் தெரிகிறது. இதனால் உணவு மற்றும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படமாட்டாது என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தியாவசிய பொருள்களைக் கொண்டு வரும் பொருட்டு யாழ்ப்பாணத்திலிருந்து லொறிகள் சில கொழும்புக்குப் பாதுகாப்புடன் சென்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## அகதிகள் முகாம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
நொச்சி இ. போ. சபை ஊழியர்கள் கிளிநொச்சிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் பெரும் சேவைசெய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும், கோப்பாய், கொழும்புத்துறை ஆகிய பயிற்சிக் கலாசாலைகளும் அகதிகள் முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. இன்று யாழ்.இந்துக் கல்லூரியிலும் அகதிகளுக்குப் புகலிடமளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கண்டியிலிருந்து நேற்றுச் சுமார் பதின்மூன்று பஸ்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக வந்து சேர்ந்தனர். கண்டிவளாக மாணவர்களும் வந்துசேர்ந்தனர். கண்டியிலிருந்து வந்த மன்னாரைச் சேர்ந்த வளாக மாணவ மாணவிகள் சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் மூலம் கேரதீவு வழியாக மன்னாருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அகதிகள் முகாம்களுக்கு வந்து சேருவோர் உடனுக்குடன் அவர்களது சொந்தஇடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மற்றையோர் முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு நிரந்தரமான இடம் தேடுவதில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஈடுபட்டுள்ளனர்.

## பிரதமருடன் மொரார்ஜி பேசினார்

கண்டியிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரியின் இல்லத்தினுள் காடையர் சிலர் நுழைந்ததாகவும் இதுபற்றி இந்தியத் தூதரகம் புதுடில்லியுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இலங்கைப்பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தொலைபேசியில் பேசியதாகவும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

## உணவும் எரிபொருளும்

யாழ்ப்பாணத்துக்கு அடுத்த இரண்டு மாதத்துக்குப் போதுமான அரிசியும், மாவும் இருப்பினும் சீனி மற்றும் மண்ணெண்ணை, பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களை அவசரமாக இங்கு கொண்டு வருவதற்கு ரயில்வே அதிகாரிகளின் உதவியை யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கமும் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கமும் நாடியுள்ளனர். நேற்று சரக்கு ரயில் ஒன்று அத்தியாவசியப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்தது.

## இன்றுமாலை 5-30மணிவரை பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் இன்று பஸ்சேவை காலை ஐந்துமணிக்கு ஆரம்பமாகுமென்றும் யாழ். பஸ் நிலையத்திலிருந்து கடைசி பஸ் மாலை 5-30க்கு புறப்படுமென்றும் ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டால் கடைசி பஸ் புறப்படும் நேரம் மேலும்நீடிக்கப்படலாமென்றும் யாழ். டிப்போவைச் சேர்ந்த அதிகாரி திரு. சொக்கலிங்கம் தெரிவித்தார்.

## கலவரம்பற்றி பிரதமர்

அரசாங்கக் கட்சி எம். பி.க்களின் விசேஷ கூட்டத்தில் எம்.பி.க்கள் பலர் நாட்டில் ஏற்பட்டுள்ள கலவர நிலைபற்றிக் கேள்விக்குமேல் கேள்விகள் கேட்டதாகவும்இதற்குப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பதிலளிக்கையில் கலவரங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டதாகவும் அறியப்படுகிறது.

## மீன், காய்கறிலொறிகளுக்கு மட்டும் அனுமதி

கொழும்பு, செவ்.
ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்வேளைகளில் காய்கறி, மீன் ஆகிய உணவுப் பொருள்களை ஏற்றிச்செல்லும் லொறிகளுக்கு மட்டும் வீதியில் செல்ல அனுமதி வழங்கப்படும்.

பொலிஸ்நிலையங்களிலிருந்து பெறப்படும் விசேட அனுமதிப்பத்திரத்துடன் இந்த லொறிகள் வீதியில் செல்ல அனுமதிக்கப்படும்.

லொறிகளுக்கான விசேட அனுமதிப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் அருகே உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு விண்ணப்பிக்கும்படி அரசு கேட்டுள்ளது. (இ)

## இ. சோ. மு. யாழ்கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்
'சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து நாடுமுழுவதும் நடைபெறும் வன்செயல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதுதொடர்பாக அரசாங்கம் பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன்மூலம் குற்றவாளிகளைக்கண்டுபிடித்து கடும் தண்டனை வழங்கவேண்டுமென இஸ்லாமிய சோஷலிச முன்னணி யாழ். கிளைச்செயலாளர் ஜனாப் ரவூப் பிரதம மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கோரியுள்ளனர். (கெ)

## சட்டத்தரணிகள் சங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்
நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களின் காரணமாக யாழ். நீதிமன்றங்களுக்கு கட்சிக்காரர்கள் சமூகம் கொடுக்க முடியாதநிலை ஏற்பட்டிருப்பதால் நிலைமை முற்றுகசீரடையும்வரை நீதிமன்றக் கடமைகளை சட்டத்தரணிகள் புரியமுடியாதிருக்கிறது என்று ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை 29-ம் திகதி திங்கட்கிழமையன்று மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானமெடுத்துள்ளது.

நேற்றையதினம் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதிபதி தம்பித்துரை தலைமையில் கூடிய மேற்படி சங்கம் இத்தீர்மானத்தை மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ் மாவட்ட நீதிபதி, நீதவான்மன்ற நீதிபதியாகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

## நாட்டில் தலைதூக்கிய வன்முறைச்சம்பவங்கள்:

# அரசியல் சந்தர்ப்பவாதம்

# என்று 'பிரேமா' கண்டனம்!

## தோல்வி அடைந்தோரின் சூழ்ச்சி என்கிறார் 'ஈ. எல்.'

(கொழும்பு)

**தேசியவாதம் என்றபோர்வையில், அரசியல் நோக்கம்கொண்ட, பொறுப்புணர்ச்சியற்ற சில சந்தர்ப்பவாதிகள், நாட்டின் பல பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களிடமிருந்து நாட்டைப்பாதுகாக்க சகல மக்களும் முன்வர வேண்டும் என்று உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று தேசிய அரசுப் பேரவையில் உரையாற்றுகையில் அழைப்பு விடுத்தார்.**

தேசிய அரசுப்பேரவை நேற்று பிற்பகல் 2 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியபோது அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா உரை நிகழ்த்தினர். அவர் மேலும் பேசியதாவது:

### 'எம்.பிக்களின் கடமை'

''சில பொறுப்பற்ற சந்தர்ப்பவாதிகளினல் கட்டவிழ்ந்து விடப்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வேண்டியது இப்பேரவைஉறுப்பினர்களின் பெரும் கடமையாகும். ஒவ்வொரு எம். பி யும் தத்தமது தொகுதிக்குத் திரும்பியதும், கலக நிலையைக் கட்டுப்படுத்தி, நாடு வழமைபோல் செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

### எமதுபிரச்னை

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மட்டும்தான் பிரச்னைகள் உண்டு என்று கருதிவிடக் கூடாது. ஒவ்வொரு கட்சிக்கும் பிரச்னைகள் பல இருக்கலாம். இந்தப் பிரச்னைகளைச் சுமுகமான சூழ்நிலையில் தீர்க்கும் வழிமுறைகளை நாம் கண்டறியவேண்டும். இதற்காக சகல முயற்சிகளையும் மேற்கொள்ள அரசாங்கம் எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதை மீண்டும் இப் பேரவையில் வலியுறுத்துகின்றேன்.

### 'எல்லோரும் சமமே'

'இந்தநாட்டில் இரண்டாம் இடத்துக்கு எவரும் தள்ளப் படமாட்டார்கள். அப்படி ஒரு தனிநபரையோ அல்லது ஒரு சமூகத்தவர்களையோ ஒதுக்கும் எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது. இந்தநாட்டில் எல்லோரும்சமமே. எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. இதனை மனதில் கொண்டு நாம் செயல்பட வேண்டும். எம்மைப் பொறுப்புள்ளவர்களாக மாற்றி, சமூக ஒற்றுமை மூலம் நாட்டில் நிரந்தர ஐக்கியம் ஏற்படுத்தப் பாடுபடுவோம்.

### 'விசாரணைகள் நடைபெறும்'

'நாட்டில் தலைதூக்கியுள்ள வன்முறைச்சம்பவங்கள் குறித்து. பாரபட்சம்ற்றமுறையில் விசாரணைகள் நடைபெறும். இந்த விசாரணைகளின்போது முன்னர் நிகழ்ந்த சம்பவங்களும் இன்று தலைதூக்கிய அசம்பாவிதச் சம்பவங்களும் இடம் பெறும். நாம் நமது பிரச்னைகளை சுமுகமான முறையில் தீர்க்க முயலுவோம். இது நிறைவேற சகல இன மக்களினதும் ஒத்துழைப்பும் இன்றி அமையாதது' என்று கூறினர்.

### 'அமிர்' பேச்சு

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்துகையில், ஜனநாயகம் சரியான முறையில் செயல்பட பலமான ஒரு எதிர்க்கட்சி அவசியமானது என்றார்.

மக்களின் பிரச்னைகளைத் தீர்க்காத காரணத்தினுல் தான், முன்னைய அரசு மக்களினுல் தூக்கி எறியப்பட்டது என்பதை ஞாபகப்படுத்திய திரு. அ அமிர்தலிங்கம், எமது பிரச்னைகளைத் தீர்க்க அரசு உடனடியாகச் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### காணி அமைச்சர் பேச்சு

விவசாய காணி அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயக்கா பேசுகையில், கண்டியில் தலைதூக்கிய வன்முறைச் சம்பவங்களுக்கு யார் காரணம் என்பது தமக்குத் தெரியும் என்றும், இவற்றை நிரூபிக்க தம்மிடம் போதிய ஆதாரம் உண்டு என்றும் கூறினர்.

''கண்டியில் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கிய போது தமிழர்களின் வீடுகளும், கடைகளும், ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களின் வீடுகளும் சேதப்படுத்தப்பட்டன. ஆனுல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் எவரது வீடுகளும் தாக்கப்படவில்லை.

### ''தோல்வி கண்ட முன்னுள் எம். பிக்கள்—''

இந்த அசம்பாவிதங்கள், தோல்விகண்ட முன்னுள் எம். பிக்களின் சூழ்ச்சிகளினுல்தான் பல நடந்தது 'என்டதை இப்பேரவையில் நான் திட்டவட்டமாகக் கூறுவேன். இதற்குப் போதிய ஆதாரங்கள் என்னிடம் உண்டு.

### 'தனிநாடு முடியாது'

''இந்த நாட்டைத் துண்டாடும் முயற்சிகளைக் கைவிட வேண்டும். இந்த நாட்டில் தனிநாடு அமைக்க முடியாது நாம் எல்லோரும் ஐக்கியமாக உழைத்து தமிழர், சிங்களவருடன் இணைந்து நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வோம் என்று தமிழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று காணி அமைச்சர் குறிப்பிட்டார்.

### ராஜலிங்கம் பேச்சு

உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. த ராஜலிங்கம் நேற்று நிகழ்த்திய கன்னி உரையில், வடமாகாணத்தில் சிங்கள மக்களைத் தமிழ் மக்கள் பாதுகாத்துள்ளனர் என்றும், யாழ்ப்பாண வளாகத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்களுக்கு எந்த விதத் தீங்கும் ஏற்படாத வண்ணம் தமிழ் மாணவர்கள் பாதுகாப்பு அளித்திருந்தனர் என்றும் கூறினர்.

### வர்த்தகஅமைச்சர் பேச்சு

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பேசுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இனிமேல் எதிர்காலமே கிடையாது என்று கூறினர்.

'தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப பல பிரச்னைகள் இருக்கலாம். இந்தப் பிரச்னைகள் என்னவாக இருந்தாலும், தனித்தனியாக அவற்றை அணுக இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. எம்மிடையே தோன்றும் பிரச்னைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்ப்போம்' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

''அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்குவதற்கு 'கியூ'வில் நிற்கும் அந்தரநிலை அடுத்த மாதம் முதல் நீக்கப் படும்.' என்றும் வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார்.

### மொகமட்பேச்சு

போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச் மொகமட் பேசுகையில். தமிழர்களின் பிரச்னைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

'நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்குவதை அரசு அனுமதிக்காது. இந்தப் பிற்போக்கு சக்திகளின்மீது அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### வட்டமேசை மாநாடு

கைத்தொழில் அமைச்சர் திரு. ஜீ. சிறில் மத்யூ பேசுகையில், 'தமிழ் சமூகத்தின் பிரச்னைகளை ஆராய அரசு தயாராக இருக்கிறது என்றும் வட்டமேசை மாநாடு மூலம் தமிழர் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கலாம் என்றும் நம்பிக்கைதெரிவித்தார்.

## 'பிரச்னைகள் தீர தமிழ்த் தலைவர்கள் உதவவேண்டும்'

### — நிதியமைச்சர்

கொழும்பு, செவ்வாய்

''தமிழ் இனத்தின் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி தமிழ் மக்களின் பிரச்னைகளை சமாதான முறையில் தீர்க்க தமிழ்த் தலைவர்கள் உதவ வேண்டும்.''

இவ்வாறு நிதிஅமைச்சர் திரு. ரொனி டீ மெல் இன்று தேசிய அரசுப் பேரவையில் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

முன்னைய அரசு பதவியிலிருந்தபோது பல கவலைக்கிடமான நடவடிக்கைகளை மேற்கொண்டமையினுலேயே கடந்த தேர்தலில் படுமோசமான தோல்வியை அவர்கள் எதிர் நோக்கவேண்டியிருந்தது.

சோஷலிஸத்தின் அத்திவாரம் பசிப்பிணியைப் போக்குவதுதான். ஐ. தே. க. அரசு பெயரளவில் மட்டும் சோஷலிஸத்தை கடைப்பிடிக்கமாட்டாது. வரும் 6 வருடங்களிலும் சோஷலிஸ நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

70-ம் ஆண்டு பொதுத் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள்பற்றி விசாரணை செய்த சிறிவர்த்தன கமிஷனின் அறிக்கை இன்றுவரை வெளியிடப் படவில்லை. ஆனுல் அந்த அறிக்கையில் அவ்வன்முறைச் சம்பவங்களினுல் பாதிக்கப் பட்டவர்களுக்கு 80 லட்சம் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

### மரண அறிவித்தல்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தெய்வானைப் பிள்ளைசபாநாயகம் அவர்களின் ஈமக்கிரியை இன்று காலை 9மணிக்கு (24-8-77) நடைபெறும். 6892

## தேசிய ஒற்றுமைக்கு பிரஜைகள் குழு!

[கொழும்பு]

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும், நிரந்தர ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ''தேசிய ஒற்றுமைக்கான பிரஜைகள் குழு'' ஒன்று இன்று அமைக்கப்பட்டது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இக்குழு இன்று அமைக்கப்பட்டது.

தேசிய ஒற்றுமை பாதுகாக்கப்படவேண்டும் என்றும் நிரந்தர சமாதானம் நாட்டில் நிலவும் வகையில் பல்வேறு மதங்களையும் சேர்ந்த சமயகுரவர்களின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குழுவின் நோக்கங்கள் நிறைவேற இம்மாதம் 28ம்திகதியை சமய அனுஷ்டான தினமாகக் கொண்டாடவேண்டும்என்றும் இன்றைய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வகுப்பு வாதம் தலை தூக்குவதை கண்டிக்க வேண்டும் என்றும் அமைதி நிரந்தரமாக ஏற்பட அயலவர்கள் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் நிலைமை திருப்தி

### பொலிஸ் உயர் அதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதி அரசாங்கஇணைப்பு அதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கம், பொலிஸ் அதிபர் ஆர். சுந்தரலிங்கம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் நகரின் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

வர்த்தகர்களை அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் பொலிசாரும், ராணுவத்தினரும் மக்களுடன் ஒத்துழைத்து நடந்து கொள்வார்கள் என்றும் உறுதியளித்தனர்.

நேற்று உணவு ரயில் ஒன்று வந்துசேர்ந்தது. இன்றும் நாளை நாளையமறுதினமும் சரக்கு

(3-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka